சிறப்பு அமர்வு வழக்கு எண் : 28/2025
அ.சா : 1
பெயர் : வினோத்ராஜ். த/பெ. சேகர்
நாள் : 11.02.2026

**குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இறந்து போன ராஜேஷ் என் நெருங்கிய நண்பர். ராஜேஷ், நான், அசா 2, 3 ஆகியோர் ஒரே கிராமத்தில் அடுத்தடுத்த தெருவில் வசிக்கிறோம். மயிலாடுதுறை சாலையும் வைத்தீஸ்வரன் கோவில் மணல்மேடு சாலையும் சந்திக்கும் இடம் தான் பட்டவர்த்தி என்றால் சரிதான். மணல் மேட்டு சாலையிலிருந்து பெட்ரோல் பங்க் 500 மீட்டர் தொலைவிருக்கும் என்றால் சரிதான். பெட்ரோல் பங்கிலிருந்து தெற்குபுறமாக வலதுபறத்தில் மேற்கு நோக்கி செல்லும் சாலை வரதம்பட்டு சாலை என்றால் சரிதான். அங்கிருந்து தெற்கில் 200 மீட்டர் தொலைவில் நடராஜபுரம் செல்லும் சாலை என்றால் சரிதான். மெயின்ரோட்டிலிருந்து நடராஜபுரம் கிராமம் ஒரு 100 மீட்டர் தொலைவிருக்கும் என்றால் சரிதான். இறந்துபோன ராஜேஷ் வீடு கூறை வீடு. அவர் வீட்டில் கழிவறையில்லை. நானும் மற்ற சாட்சிகளும் ஒரே ஊரில் வெல்டிங் வேலை செய்கிறோம். சென்னையில் வேலை செய்கிறோம் என்றால் சென்னையிலும் பார்போம் மற்ற ஊர்களிலும் பார்ப்போம். மற்ற ஊர்களில் வெல்டிங் வேலை பார்க்கிறோம் என்ற விவரத்தை போலிசார் விசாரணையிலும் நான் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எப்போது சென்னையிலிருந்து ஊருக்கு வந்த விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1.07.2024 அன்று வந்தோம் என்று சொல்லியுள்ளேன். நண்பர் திருமணத்திற்காக நாங்கள் ஊருக்கு வந்தோம். இந்த விவரத்தை நான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால்

S.vinothraj

சொல்லியுள்ளேன். நானும் அசா 2, 3 ஆகியோரும் மற்றும் இறந்த ராஜேஷ் ஒரே ஊரில் தான் வசிக்கிறோம். நாங்கள் எங்கள் ஊருக்குள்ளேயே பார்த்து பேசிக்கொள்ளலாம். வரதம்பட்டு பாலத்திற்க சென்று பேசியதற்கான காரணத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் பெயரில் வழக்குகள் இல்லை. மற்ற சாட்சிகள் பெயரில் எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று எனக்கு தெரியாது. என் வீட்டருகே எதிரியின் வீடு இல்லை. எதிரியின் வீடு நடராஜபுரம் ரோடு பிரியும் இடததிலிருந்து மயிலாடுதுறை சாலையில் தெற்கில் 300 மீ தொலைவில் உள்ளது. எதிரி எனக்கு நண்பர் இல்லை எந்த தொடர்பும் இல்லை. அவர் மீது என்ன வழக்குகள் யாருடைய புகாரின் பேரில் எந்த தேதியில் பதிவாகியுள்ளது என்று தெரியாது. எதிரிக்கு யாரை பிடிக்கும் யாரை பிடிக்காது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் மது அருந்தமாட்டேன். எதிரி ரஞ்சித் மது அருந்துவாரா என்று எனக்கு தெரியாது. வரதம்பட்டு பாலத்திற்கு போவதற்கு முன்பே இறந்து போன ராஜேஷ முதலில் அங்கிருந்தார். அந்த ராஜேஷ் உடன் 4, 5 சாட்சிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். வரதம் பட்டு பாலத்திலிருந்து ராஜேஷ் வீடும் பெட்ரோல் பங்கும் ஒரே தொலைவில் உள்ளது என்றால் சரிதான். அது கிராமங்கள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் அருகில் மரப்பட்டறை, கல்யாண மண்டபம் எல்லாம் உள்ளன என்றால் சரிதான். மயிலாடுதுறை செல்லும் சாலை உயர்ந்த புளியமரங்கள் நிறைந்த அடர்ந்த பகுதி என்றால் சரிதான். அந்த சாலையின் இரு புறங்களும் புதர் மண்டிய பகுதி என்றால் சரிதான். சம்பவத்தன்று இறந்துபோன ராஜேஷ் மது அருந்தினாரா என்று எனக்கு தெரியாது. சாதாரணமாக கிராமத்தில் ஒருவர் மது அருந்தியுள்ளாரா இல்லையா

S. Vinothraj

என்பதை பார்த்து சொல்லமுடியும் என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் இரவு 9.00 மணிக்கு மூடிவிடுவார்கள் என்றால் இல்லை இரவு 11.00 அல்லது 12.00 மணிவரை இயங்கும். பெட்ரோல் பங்கில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். கல்யாண மண்டபத்திலும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜேஷ் சென்ற 10 நிமிடத்தில் நான் அவருடைய போனுக்கு போன் செய்தேன். அவர் போன் நம்பர் நினைவில்லை. யாருடைய போனிலிருந்து ராஜேஷ் போனுக்கு போன் செய்தோம் என்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த போன் பதிவுகளை ஆய்வாளரிடம் காண்பித்தேன். அதை அவர் குறித்து கொண்டார். ராஜேஷ் போனை சம்பவ இடத்திலிருந்து போலிசார் கைப்பற்றினார். போனை ஆய்வாளர் தான் இரவு 10.45 மணிக்கு கைப்பற்றினார். ஆய்வாளர் அங்கு வந்துபோது ராஜேஷ் பிரேதம் இருந்தது. யார் சொல்லி போலிசார் அங்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் போனை பார்த்தால் நான் சம்பவத்தன்று சென்னையிலிருந்தேனா பட்டவர்த்தியிலிருந்தேனா என்று தெரியும். இரவு 10.45 மணிக்கு சம்பவஇடத்திற்கு வந்த ஆய்வாளர் மற்றும் போலிசார் சம்பவ இடத்தை சுற்றி பார்த்தார்கள். அங்கு இருந்தவர்களை விசாரித்தார்கள். என்னையும் விசாரித்தார்கள். சம்பவ இடத்தை ஆய்வாளர் புகைப்படம் எடுத்தார் அங்கிருந்தவர்களையும் புகைப்படம் எடுத்தார். இரவு 12.00 மணிக்கு காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். திரும்பவும் அதிகாலை 2 மற்றும் 4.00 மணிக்கு விசாரித்தார்கள். ஒவ்வொரு முறை நான் சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார். அதன்பின்னர் காலை 8.00 மணிக்கு விசாரித்தார். சம்பவ இடத்திலும் பெட்ரோல் பங்கிலும்,

S.vinoth

பாலத்திலும் விசாரித்தார். புகாரை நான் தான் எழுதினேன். எனக்கு வழக்கு தொடுப்பதற்கும் வழக்கு நடத்துவதற்கும் சட்ட அறிவு உண்டா என்றால் உண்டு என்று சாட்சி சொல்கிறார். இந்த நீதிமன்றத்தில் எனக்கு வழக்கை நடத்த போதிய சட்ட அறிவு இல்லை என்று பிரமாண வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. காவல் நிலையத்திற்கு நான் ராஜேஷ் உடைய அம்மா, அப்பா, உதயராஜ், பூபாலன் ஆகியோர் 11.00 மணிக்கு சென்றோம். அங்கு சுமார் அரை மணிநேரம் இருந்தோம். அதன்பின்னர் எங்கு சென்றோம் என்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 108 ஆம்புலன்ஸிற்கு யார் போன் செய்தார்கள் என்ற விவரத்தை நான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு ஆம்புலன்ஸ் வந்து சென்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரேதத்தை சம்பவ இடத்திலிருந்து எத்தனை மணிக்கு ஆம்புலன்ஸில் ஏற்றி கிளம்பினார்கள் என்ற விவரம் மற்றும் யார் பிரேதத்துடன் சென்றார்கள் என்ற விவரத்தையும் எத்தனை மணிக்கு பிரேதம் மருத்தவமனைக்கு சென்ற விவரத்தை போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நாட்டாமைகாரர்கள் காவல் நிலையத்திற்கு வந்தார்கள் ஏழு பேர் வந்தார்கள். அவர்கள் சாதி அமைப்பை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. நானும் மற்ற சாட்சிகளும் சாதி அமைப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. நாங்கள் எந்த இடத்திலிருந்து ராஜேஷை பார்த்தோம் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லி அவர்கள் அதை குறித்து கொண்டார்கள். சம்பவத்தன்று பெட்ரோல் பங்க் திறந்திருந்ததா என்றால்

S. vinoth raj

அன்று சம்பவம் நடந்த பிறகு பெட்ரோல் பங்கை மூடிவிட்டார்கள். போலிசார் வருவதற்கு முன்பே பெட்ரோல் பங்கை மூடிவிட்டார்கள். நான் அந்த பெட்ரோல் பங்க் உள்ளே பார்த்துள்ளேன். பெட்ரோல் போடுவதற்கு அங்கு போவேன். அங்கு வெஸ்டர்ன் கழிவறை வசதி இல்லை என்றால் சரியல்ல. ராஜேஷ் உடைய இருசக்கர வாகனத்திற்கு நம்பர் கிடையாது. அந்த வண்டி யாருக்கு சொந்தமானது என்றால் ராஜேஷ்கு சொந்தமானது. எங்களுடைய உடைகளிலும் ராஜேஷ் உடைய இரத்தம் இருந்ததா என்றால் என்னுடைய சட்டையில் ராஜேஷ் இரத்தகறை படிந்தது அதை நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. அது கற்பனையானது என்றால் சரியல்ல. எதிரி ரஞ்சித் ஆட்டோ விபத்து ஏற்படுத்தி நஷ்ட ஈடு கேட்க சென்றது எனக்கு நேரடியாக தெரியாது. ராஜேஷ்க்கு இது போன்ற விஷயங்களில் ஈடுபட முகாந்திரம் எதுவும் கிடையாது. அவருடன் யார் யார் சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக நான் கேள்விப்பட்டேன். அது கற்பனையானது என்றால் சரியல்ல. எதிரிக்கும் ராஜேஷ்கும் எந்த பிரச்சனையும் எப்போதுமே கிடையாது என்றால் சரியல்ல. ராஜேஷ் மீது பல குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அவர் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்று வந்துள்ளார். ஆட்டோ பிரச்சனையில் சென்று வந்தார். ராஜேஷை தேடி செல்ல வேண்டிய அவசியம் என்ன என்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வரதம் பட்டு பாலத்தில் எங்களுக்கு குறிப்பிட்ட வேலையில்லை. எந்த வெளிச்சத்தில் எதிரியையும் அவர் வண்டியின் நிறத்தையும், சம்பவத்தையும் பார்த்தேன் என்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

S.Vinoth

நாங்கள் மூவரும் சென்ற வாகனத்தை பற்றி புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவரால் நின்று பேசமுடியாது அதனால் வண்டியில் உட்கார்து பேசுவார் என்ற விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. அது ராஜேஷ் சொல்லி எனக்கு தெரியும். அசாஆ 1 புகாரை சாட்சியிடம் காட்டி கேட்டபோது அதில் உள்ள விவரங்களை நான் எழுதவில்லை என்கிறார். நான் கைப்பட எழுதிக்கொடுத்ததாக சொல்லும் புகாரை என்னிடம் இது வரை காட்டவில்லை என்றால் சாட்சி சரிதான் என்கிறார். ராஜேஷ் வேறு யாராலோ தாக்கப்பட்டு இறந்துகிடந்து அதை பொதுமக்கள் பார்த்து காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி ஆய்வாளர் உட்பட காவலர்கள் சம்பவ இடத்திற்கு வந்து இறந்தவரின் அடையாளத்தை உறுதி செய்து கொண்டு அவரின் உறவினருக்கு தகவல் சொல்லி அவர்களெல்லம் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. விவரம் தெரிந்த அமைப்பை சேர்ந்த எங்களை சாட்சிகளாக என்னையும் மற்ற சாட்சிகளையும் தகவல் சொல்லி சென்னையிலிருந்து மறுநாள் மதியம் 1.00 மணிக்கு மேல் தான் வரவழைக்கப்பட்டோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பல்வேறு தரப்பினரின் விருப்பு வெறுப்புகளின் பொய்யான தகவலின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் எப்படி யாரால் நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. பட்டியல் இனத்தை சேராத ஒரு நபர் மீது வழக்கு தொடுத்தால் ஆதாயம் கிடைக்கும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்து சாட்சியமளிக்கிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கினால் எனக்கு தனிப்பட்ட நஷ்டம் எதுவும் உண்டா என்றால் இல்லை. தனிப்பட்ட நஷ்டம்

S. vinoth

ஏற்படும் என்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த புகாரும் நான் சொன்ன நேரத்தில் சொன்னபடி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை